22.09.2017

தினமலர்

## 3 நாட்களுக்கு கன மழை

சென்னை :'தமிழகம் மற்றும் புதுச்சேரியில், நாளை முதல் மூன்று நாட்களுக்கு கனமழை பெய்யும்' என, வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளதுதமிழகத்தில் ., ஒரு வாரமாக பருவ மழை விலகி, வெயில் அதிகரித்துள்ளது மாலை அல்லது இரவு . நேரங்களில், சில இடங்களில் மழை பெய்கிறதுஇந்நிலையில் ., தமிழகம் மற்றும் புதுச்சேரியில், நாளை முதல், மூன்று நாட்களுக்கு, கன மழை பெய்ய வாய்ப்புள்ளது என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நேற்று காலை, அமணியுடன் முடிவடைந்த ௨0:, ௨௪ மணி நேரத்தில், நீலகிரி தேவாலா, நாகர்கோவில், பூதப்பாண்டி, பேச்சிப்பாறை ஆகிய இடங்களில், க செ.மீ., மழை பெய்தது.

## குமரியில் தொடரும் மழை

நாகர்கோவில் கன்னியாகுமரி மாவட்டத்தில் :, மழை தொடர்வதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்கடந்த ., 15 நாட்களாக குமரி மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது .அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது பேச்சிப்பாறை . அணை நீர்மட்டம், 23 அடியாக உயர்ந்துள்ளதுகடந்த ., 10 நாட்களில், 10 அடி நீர்மட்டம் உயர்ந்ததுபெருஞ்சாணி அணை ., 50 அடியை எட்டுகிறது.

குளங்களில் தண்ணீர் தேங்கி, கிணறுகளில் ஊற்று உருவாகி, குடிநீர் தட்டுப்பாடு குறைய துவங்கியுள்ளதுரு .,000 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல் பயிரை காப்பாற்ற முடியுமா என்று கவலைப்பட்ட விவசாயிகள் தற்போது மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தினமணி

# காற்றழுத்த தாழ்வுநிலை: தமிழகம் புதுச்சேரியில் மழைக்கு வாய்ப்பு



காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக தமிழகம் , புதுச்சேரியில் மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையத் தகவலில் , தெலங்கானா முதல் தென்தமிழகம் வரை காற்றழுத்த தாழ்வுநிலை உருவாகியுள்ளது. இதன் காரணமாக தமிழகம் , புதுச்சேரியில் மழை பெய்ய வாய்ப்பு. அதேநேரம் தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

மேலும் சென்னையை பொறுத்தவரை பொதுவாக வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும் மாலை அல்லது இரவு நேரங்களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.